பக்கங்கள் 15+5

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

யாழ். பொலிஸ் நிலையத்தில் இருந்து

## சந்தேகநபர் ஒருவர் இன்று தப்பியோட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தலைமைப் பொலிஸ் நிலையத்தில் இருந்து சந்தேகநபர் ஒருவர் இன்று தப்பிச் சென்றுள்ளார். 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 30 திங்கட்கிழமை 13.05.2024 அதிர்வு 287

# யாழ். பல்கலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி





(எஸ்.நிதர்ஷன்)

தமிழினப் படுகொலையை அடையாளப்படுத்தும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் நிலையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சி இன்று வழங்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பல்கலைக் கழக விஞ்ஞான பீட நுழைவாயிலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் மக்கள் துன்பப்பட்டு, வறுமைப்பட்டு, உணவு இல்லாமல் தவித்தனர். எத்தனையோ சிறுவர்கள், பெரியவர்கள் சொல்ல முடியாத கொடுமைக்கு ஆளானார்கள். வலிகள் நிறைந்த அந்த நேரத்தில் கஞ்சிதான் இலட்சக்கணக்கான மக்களின் உயிரைக் காத்தது என்ற அடிப்படையில் அந்த நினைவைக் கடத்தும் வகையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி விநியோகிக்கப்பட்டது.

# முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து நாடாளுமன்றத்தில் ‘சிரட்டை’யைச் சமர்ப்பித்த சிறீதரன்

## நூதனசாலையில் வைக்குமாறு கோரிக்கை

(எஸ்.நிதர்சன்)

முள்ளிவாய்க்கால் படுகொலையை நினைவுகூர்ந்து ‘சிரட்டை’ ஒன்றை சபாபீடத்துக்குச் சமர்ப்பித்து அதனை நாடாளுமன்ற நூதனசாலையில் வைக்குமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று நடைபெற்ற நிதிக் கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். 04



# சாட்டியில் வெடிபொருட்களுடன் ஒருவர் கைது!









(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், வேலணை – சாட்டி கடற்கரைப் பகுதியில் இருந்து சுமார் 3 கிலோ வெடிமருந்துகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன் அவற்றை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆண் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாட்டி கடற்கரைப் பகுதியில் வெடிபொருட்கள் காணப்படுகின்றன என்று ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு விரைந்த விசேட அதிரடிப் படையினர் 3 கிலோ 145 கிராம் வெடி மருந்துக்கள், ஆர்.பி.ஜி. எறிகணைகள் 8 மற்றும் 60 எம்.எம். மோட்டார் எறிகணைகள் 12 என்பவை மீட்டுள்ளன.

மீன்பிடித் தேவைக்காகக் குறித்த வெடிபொருட்களைச் சந்தேகநபர் உடைமையில் வைத்திருந்தார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.




# யாழ். பல்கலைக்கழகத்தில் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதிலுமுள்ள அரச பல்கலைக்கழகங்களில் நடைபெற்று வரும் தொடர்ச்சியான வேலைநிறுத்தத்தின் ஒரு பகுதியாக அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் கவனயீர்ப்புப் போராட்டம் நடத்த அழைப்பு விடுக்கப்பட்டமைக்கமைய இன்று காலை 10 மணியளவில் யாழ். பல்கலைக்கழக நுழைவாயிலில் போராட்டம் நடைபெற்றது. பல்வேறு விடயங்களை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.











## நெடுங் கண்டல் புலவை திறந்து விடுமாறு கோரி

# மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு!

## அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கலுக்குக் கண்டனம்






**(மன்னார்)**

மன்னார் மாவட்ட சிறு போக நெற்செய்கைக்கான புலவுகளை தெரிவு செய்வதில் அதிகாரிகளின் தனிப்பட்ட பழி வாங்கலை கண்டித்து இன்று திங்கட்கிழமை (13) காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகக் கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான சிறு போக செய்கைக்காக நெடுங் கண்டல் புலவை திறந்து தருமாறு கோரி மாந்தை மேற்கு விவசாயிகள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழை வாயிலை முற்றுகையிட்டு, பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் அதிகாரிகளின் தனிப்பட்ட பழிவாங்கல்களுக்கு இடம் கொடுக்காதீர்கள், திறந்து விடு திறந்து விடு நெடுங் கண்டல் புலவை திறந்து விடு, கொல்லாதே கொல்லாதே விவசாயிகளை கொல்லாதே உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது போராட்டத்தில் ஈடுபட்ட மாந்தை மேற்கு விவசாயிகள் கருத்து தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்ட காலம் தொட்டு இன்றுவரை ஒரு போதும் நெடுங் கண்டல் புலவு பூட்டப்படவில்லை.

1974 ஆம் ஆண்டு நீர் தட்டுப்பாடு வந்த போது காலபோகத்தில் செய்கை பண்ணப்படும் 40 ஏக்கருக்கு சிறுபோகத்தில் ஒரு ஏக்கர் என்ற தீர்மானத்தில் 40:1 என்ற விகிதத்தில் விவசாயம் செய்யப்பட்ட போது சின்ன உடைப்பு துலுசின் கீழ் உள்ள புலவுகள் மாத்திரம் திறக்கப்பட்டது.

இதில் நெடுங்கண்டல் புலவு முதன்மையானதாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட நீர் தட்டுப்பாடு காரணமாக அனைத்து புலவுகளும் பூட்டப்பட்டு மன்னார் மாவட்ட விவசாயிகள் விதை நெல் தேவைக்காக நெடுங்கண்டல் புலவு மாத்திரம் திறந்து விவசாயம் செய்யப்பட்டது.

இம்முறை எமது நெடுங்கண்டல் புலவு இம்முறை பூட்டப் பட்டதற்கான காரணத்தை தனிப்பட்ட முறையில் எமது கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள் உரிய அதிகாரிகளை சந்தித்து வினவிய போது 2023 ஆம் ஆண்டின் புலவு பங்கீட்டில் தனிப்பட்ட நபர் ஒருவருடனான முரண்பாடடுக்குப் பழி தீர்க்கும் வகையில் இந்த முறை எமது புலவு பூட்டப்பட்டுள்ளது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொண்டுள்ளோம்.

குறித்த விடயத்துக்காக நாம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் மன்னிப்புக் கோரினோம்.உரிய அதிகாரிகளை நேரில் சந்தித்து மிகத் தெளிவாக விளக்கியிருந்தோம். சாதக பாதக நிலையை தெளிவு படுத்தி எமது புலவை திறந்து தரும் படி பணிவாக வேண்டினோம். எனினும் ஏழை விவசாயிகளாகிய நாங்கள் வஞ்சிக்கப்பட்டோம்.

இதன் அடிப்படையிலேயே எமது உரிமைகளை பெற்றுக் கொள்ள போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு இன்றைய தினம் தள்ளப்பட்டுள்ளோம்.- என்றார்.

தமது கோரிக்கை அடங்கிய மகஜர் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

இதன் போது விவசாயிகள் சார்பாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன் ராஜ், மன்னார் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் முஜாகிர் உற்பட பலர் கலந்து கொண்டனர்.



# யாழ். பல்கலையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி











# குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழப்பு

சீதுவை, ரத்தொலுகம பிரதேசத்தில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அடுக்குமாடிக் கட்டடம் ஒன்றிலிருந்த குளவிக் கூடு கலைந்து அப்பகுதியில் இருந்தவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

இதனால் பாதிக்கப்பட்ட மேற்படி நபரும், இரு பிள்ளைகளும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே அந்த நபர் உயிரிழந்துள்ளார்.



## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சந்தேகநபர்...**

அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கஞ்சாவை வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரே இவ்வாறு தப்பிச் சென்றுள்ளார்.

**முள்ளிவாய்க்கால்**

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“இந்த மாதம் எமக்கு மிகவும் முக்கியமானது. எமது வேதனைகளை வெளிப்படுத்துகின்றது. நான் இந்தச் ‘சிரட்டை’யைச் சபாபீடத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன். இதுதான் முள்ளிவாய்க்காலில் எமது மக்களுக்குக் கஞ்சி வழங்கிய சிரட்டை.

அப்போது குடிப்பதற்கு ஒரு உபகரணம் இருக்கவில்லை. கஞ்சி காய்ச்சுவதற்கு அரிசி இருக்கவில்லை. உப்பு இல்லை. தண்ணீர் கூட எடுக்க நிலைமை இருந்தது.

இவ்வாறான நிலைமையில் வெறும் உப்பில்லாத கஞ்சியைக் காய்ச்சி இந்தச் சிரட்டையில்தான் எமது மக்கள், குழந்தைகள் குடித்து உயிர் தப்பினார்கள்.


அதனால் முள்ளிவாய்க்கால் அடையாளமாக இந்தச் சிரட்டையைச் சபாபீடத்துக்குச் சமர்ப்பிக்கின்றேன். தயவு செய்து நாடாளுமன்றத்தின் நூதனசாலையில் இந்தச் சிரட்டையை வையுங்கள்.” – என்றார்.

# ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய மூன்று நூல்கள் சிட்னியில் வெளியீடு!










சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடும் இலக்கிய அரங்கும் நடைபெறவுள்ளன.

பாலஸ்தீனம் எரியும் தேசம், ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல், இலங்கை இதழியலில் சிவகுருநாதன் ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் மூன்று நூல்கள் வெளியீடு சிட்னியில் உள்ள பெமுள்வே சமூக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வின் தலைமையுரையை எழுத்தாளர் மாத்தளை சோமு ஆற்றுவார். பாலஸ்தீனம் எரியும் தேசம் நூல் அறிமுகவுரையை தனபாலசிங்கம் நிகழ்த்துவார். அதன்பின் ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல் நூலின் அறிமுகவுரையை டாக்டர். ஹாரூன் காசிம் ஆற்றுவார்.

இலங்கை இதழியலில் சிவகுருநாதன் நூலின் அறிமுக உரையை எழுத்தாளர் சுந்தரதாஸ் ஆற்றுவார்.

இந்த நூல் வெளியீட்டு நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் சிறப்புரை நிகழ்த்த உள்ளார். அத்துடன் கலாநிதி திருமதி. சந்திரிக்கா சுப்ரமண்யன் , திருநந்தகுமார் சிறப்புரை ஆற்றுவர்.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் சிட்னியில் நடைபெறும் இந்த நிகழ்வில் தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவருடன் சந்திப்பும், நூல்கள் வெளியீடும் நடைபெறவுள்ளன.

சிட்னி தமிழ் மன்றம் ஆதரவில் நடைபெறும் நூல் வெளியீடு மற்றும் இலக்கிய அரங்கின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா நிகழ்த்துவார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுக்கு இடித்துரைப்போம்!

தமிழர் தேசத்தின் ஆன்மாவையே சின்னாபின்னமாக்கி நோகடித்த - அதில் ஆழமான காயத்தை ஏற்படுத்திய - ஆறா வடுவைப் பதித்த - வரலாற்றுப் பேரழிவின் நினைவழியா நாள்கள் இவை.

இந்த வாரத்தில், அந்த கொடூரத்தைப் புரிந்த பேரினவாதம் நினைவேந்தக் கூட விடாமல், திரும்பவும் அதே பாணிக் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்து விட்டது - நீதிமன்ற உத்தரவுகள் என்ற பின்புலத்தோடு.

சம்பூரில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய இரு பெண்கள் உட்பட மூவருக்கு நேற்றிரவு நடந்த கதி, சட்ட - ஒழுங்கு மீறலாக பொலிஸாரினால் அர்த்தப்படுத்தப்பட்ட பேரினவாத கொடூரத்தின் ஒரு வடிவம்தான்.

இதைச் சட்டரீதியாக சந்திக்க முன்னர், அரசியல் ரீதியாகச் சந்திப்பது பற்றித்தான் முதலில் சிந்திக்க வேண்டும். அதுதான் சரியான முறையாகவும் இருக்கும்.

வரப் போகின்ற ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தமிழர் தரப்பில் பல்வேறு கருத்தியல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. அதுவும் தமிழ்த் தேசியத்தை - தமிழர் தேசத் தனித்துவத்தை - வலியுறுத்தும் தரப்புகளாகத் தங்களை காட்டிக் கொள்ளும் தமிழ் கட்சிகள் ஒன்றுக்கொன்று மாறுபாடான நிலைப்பாட்டை எடுத்து, கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றன. கருத்தியல் சமரை நடத்துகின்றன.

ஒரு தரப்பு தேர்தலைப் பரிஷ்கரிக்க வேண்டும் என்கின்றது. இன்னொரு தரப்பு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்கின்றது. மற்றொரு தரப்பு தேர்தலை தந்திரோபாயமாகப் பயன்படுத்தி தமிழர்களுக்கு ஆக்கபூர்வமாக ஏதும் கிடைப்பதற்கான காய் நகர்த்தல்களை அரசியல் சாணக்கியத்துடன் முன்னெடுக்க வேண்டும் என்கின்றது.

ஏதோ ஒன்றை முடிவெடுத்துச் செய்து விட்டு போங்கள். ஆனால் அந்த முடிவை எடுக்க முன்னர் இப்போது அவசரமாக ஒரு காரியம் செய்ய வேண்டி இருக்கின்றது. அதைக் கவனியுங்கள்.

ஊழிப் பெருநெருப்பாய் - பெருங் கொடூரமாய் - தமிழர் தேசம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட முள்ளிவாய்க்கால் வரையான கோரத் தாண்டவத்தின் பேரழிவு நினைவுகளை கூட மீட்டு நினைவேந்தல் செய்யும் உரிமையை மறுத்து தன் கைவரிசையை பேரினவாதம் காட்டத் தொடங்கிவிட்டது.

இன்னும் பத்து நாள்களில் தெற்கில் பேரினத்தவரின் வெசாக் கொண்டாட்டம் தொடங்கிவிடும். சந்திக்குச் சந்தி பந்தலும் தானமும் கலகலக்கும். அது தப்பில்லை. அது சமய நிகழ்வும் கூட. வரவேற்கத்தக்கதே.

சந்திக்குச் சந்தி சமையல், சாப்பாடு, கோப்பி, குளிர்பான வகை விநியோகம், தானம் என்று அரங்கேறும் அந்தக் கொண்டாட்டங்களில் இல்லாத சுகாதார சீர் கேடு, முள்ளிவாய்க்கால் நினைவையொட்டிய கஞ்சிப் பகிர்வில் வந்து விடுவதாகக் காட்டி, தன்னிச்சையாக தமிழ் தேசிய இனத்தின் மீது அடக்கு முறையை கட்டவிழ்த்து விட்டு இருக்கின்றது பொலிஸ். சம்பூரில் நேற்றிரவு கட்டவிழந்த சீருடை அட்டகாசம் - அடாவடித்தனம் - அதனைத்தான் நமக்கு எடுத்தியம்பி நிற்கின்றது.

முள்ளிவாய்க்கால் பேரவல நினைவேந்தலுக்கு கூட அனுமதிக்காமல் இத்துணை கொடூரமாய் பொலிஸார் செயற்பட அவர்களை ஏவி விட்டுப் பார்த்து நகைத்திருக்கும் ஆட்சியாளர்களுக்கு நமது அரசியல் தலைமைகள் அதற்காகக் காட்டமாக - பகிரங்கமாக - சத்தமாக - பெருஞ்சத்தமாக - கண்டனம் தெரிவிக்காமல், மறைமுகத்தில் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கக் கூடாது.

வெளியில் தமிழ்த் தேசிய ஆரவாரம், மறைவில் மதுபானச் சாலைகளுக்கான உரிமங்களை பினாமி பெயர்களில் பெறும் பரிந்துரைகளுக்கு அரசு தலைமையுடன் சல்லாபம் என்று நமது அரசியல் தலைமையின் இரட்டை வேடம் தெரிந்ததுதான். இருந்துவிட்டு போகட்டும்.

ஆனால், தமிழ் மக்களுக்கு பேரழிவை ஏற்படுத்திய முள்ளிவாய்க்கால் விவகாரத்தில் மக்களின் எஞ்சிய நினைவேந்தல் உரிமையைக் கூட பொலிஸாரின் காடைத்தனமான அணுகுமுறை மூலம் தவறாகக் கையாள அனுமதித்து விட்டு அல்லது தூண்டி ஏற்பாடு செய்துவிட்டு, பார்த்து ரசித்து இருக்கும் இந்த அரசுத் தலைமை, அந்தக் கொடூர இழிசெயல் போக்கின் பின்னரும் தமிழ் மக்களிடம் வாக்கு கேட்டு இந்தப் பக்கம் வரக்கூடாது என்பதை திட்டவட்டமான - உறுதியான - செய்தியாக நமது தமிழ் தலைமைகள் பகிரங்கமாகவும் உரத்தும், வெளிப்படையாகவும், காலதாமதமின்றியும் முரசறையும் வேளை வந்து விட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்துவதையோ, அல்லது அந்தத் தேர்தலைப் பகிஷ்கரிப்பதையோ, அல்லது யாரையும் ஆதரிப்பது என்ற முடிவையோ பிறகு ஆறுதலாக ஆலோசித்து எடுங்கள். ஆனால் அதற்கு முன்னர் மேற்படி கொடூரப் போக்கு அணுகுமுறையைக் கைக்கொண்டு இருப்பவருக்கு வாக்கு இங்கு இல்லவே இல்லை என்பதை இப்போது எல்லா தலைவர்களும் சேர்ந்து இடித்துரைக்க வேண்டும்.

# காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய மரபுப்பட்டய அறிவிப்பு





(வி.ரி.சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசி திருக்குளிர்த்தி மரபுப் பட்டய ஊர்பூராக அறிவிப்பு இந்த முறை புது முறையாக குதிரை வண்டி சகிதம் இடம் பெற்றது.

சடங்கு காலத்தில் கிராமத்தில் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான பாரம்பரிய மரபுப் பட்டயம் அறிவித்தல் சடங்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றது.

கடந்த காலங்களில் மாட்டு வண்டி சகிதம் இந்தப் பட்டய அறிவிப்பு இடம் பெற்று வந்தது. இதுவரைகாலமும் இல்லாத புதுநடைமுறையாக குதிரை வண்டி இந்த முறை அறிமுகப் படுத்தப்பட்டது.

# 10 கோடி ரூபா பெறுமதியான அம்பர் கற்பிட்டி வீடொன்றில் மீட்பு; ஐவர் கைது!

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி, கண்டல்களி பகுதியில் உள்ள வீடொன்றில் புதைத்து வைத்திருந்த நிலையில் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான அம்பர் (திமிங்கலத்தின் வாந்தி) நேற்று (12) பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் சந்தேகத்தின் பெயரில் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று புத்தளம் பொலிஸ் பிரிவின் கீழ் இயங்கிவரும் குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

வன்னாத்தவில்லு பொலிஸ் விஷேட பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் புத்தளம் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலத்தின் கீழ் இயங்கி வரும் குற்ற விசாரணை பிரிவு அதிகாரிகள் குழு இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.



அம்பர் கடலில் மிதந்து கொண்டிருந்த போது கண்டல்குழி மீனவர்களால் மீன்பிடி படகு ஒன்றில் கொண்டுவரப்பட்டு, அதனை விற்பனை செய்யும் நோக்கில் மிகவும் பாதுகாப்பான முறையில் இரகசியமாக காணிக்குள் புதைத்து வைத்திருந்தனர் என்று கூறப்படுகிறது.

இதன்போது, அந்த அம்பரை கடலில் இருந்து கொண்டு வந்ததாக சந்தேகிக்கப்படும் நால்வருடன், அதனை வளவுக்குள் மறைத்து வைத்திருந்த அந்த வீட்டின் உரிமையாளரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காகக் கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கைப்பற்றப்பட்ட அம்பர் தொடர்பில் முழுமையான விசாரணைகள் நிறைவடையும் வரை, அந்த அம்பர் புத்தளம் குற்றப் புலனாய்வுப் பிரிவில் வைத்து பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

வனாத்தவில்லு பொலிஸ் விசேட பிரிவின் அதிகாரிகளுடன் புத்தளம் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.ஆர்.ஏ.சந்திர சிறிலால் உள்ளிட்டோர் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## கல்முனை மாநகர மக்கள் வங்கிக்கு

# நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர மக்களின் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்த மக்கள் வங்கி கிளைக் கட்டடத்துக்கான தேவையறிந்து திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எச்.எம்.எம். ஹரீஸ் எடுத்த முயற்சியின் பயனாக கட்டட நிர்மாணிப்பு பணிகளை மேற்கொள்ள 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் மக்கள் வங்கி தலைமையக்கத்தால் விலைமனு கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க விடமும், மக்கள் வங்கித் தலைவர் மற்றும் உயர் அதிகாரிகளிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய இடம்பெற்ற ஆலோசனைகளின் பேரில் இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்க 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு முன்னாயத்த பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

நீண்ட காலமாக இழுபறி நிலையில் இருந்த இந்த வங்கிக் கிளைக் கட்டடத் தொகுதி அமைப்பது தொடர்பில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் மக்கள் வங்கி தவிசாளரை ஹரீஸ் எம்.பி. சந்தித்துக் கலந்துரையாடினார்.

கல்முனை மாநகர பொதுமக்களும், வர்த்தகர்களும் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் சிக்கல்களை எடுத்துரைத்து துரித கதியில் இந்த கட்டடம் அமைக்க வேண்டிய அவசியம் தொடர்பிலும் வங்கித் தவிசாளர் வலியுறுத்தியிருந்தார்.

இந்த வங்கிக்கிளை நிரந்தர கட்டடத்தில் கல்முனை நகரில் அமைய இருப்பதன் ஊடாகக் கல்முனை மாநகர மக்கள் மற்றும் வர்த்தகர்கள் முழுமையாக நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


## ஈழப் போர் இலக்கியம்:

# தமிழரின் நீண்டகால துயரமும் முள்ளிவாய்க்கால் அவலமும்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா -**

1956 இல் தொடங்கிய தமிழர் இனவழிப்பு மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனவழிப் பின் உச்சமாக நடைபெற்று, இன்னமும் தமிழர் மீதான அடக்கு முறைகள் தொடரும் நிலையில் இழந்துபோன ஓர் தேசத்தின் கனவுச் சிதறல்களாக பதிந்து நிற்கும் கவிதைகளும், ஆக்கங்களுமே ஈழப் போர் இலக்கியத்தில் முதன்மையாகின்றன.

பாறாங் கல்லெனவே தமிழர் நெஞ்சில் ஆறாமல் கிடக்கும் முள்ளிவாய்க்கால் நினைவுகள் தற்போது எழுத்துருப் பெற்று வருகின்றன.போரின் கொடு மைகளும், துயரங்களும் அகதனுள்ளே வலிகள் நெருப்பாக இன்னும் நீண்டு கொள்கிறது.



ஆண்டுகள் எத்தனை ஆயினும் மாண்டவரின் மனவோலம் மறக்க முடியாமல் மனக்கண் முன்னே இன்னமும் பதிவுகளாக உள்ளன.

*பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது*
*போகும் இடம் அறியாமல் - இங்கு*
*சாகும் வயதினில் வேரும் நடக்குதே*
*தங்கும் இடம் தெரியாமல்.*

*கூடு கலைந்திட்ட குருவிகள் - இடம்*
*மாறி நடக்கின்ற அருவிகள்*
*ஒற்றை வரப்பினில் ஓடும் இவர்களின்*
*ஊரில் புகுந்தது ஆர்மி - ஒரு*
*குற்றம் செய்யாதவர் முற்றத்தி லாயிரம்*
*குண்டுகள் வீழுதே சாமி*
*சோகத்தின் கோடுகள் முகத்தில் - இங்கு*
*சொந்தங்கள் சேருமா நிலத்தில்?*

*கூடி மகிழ்ந்திட்ட கோயில் வயல்வெளி*
*யாவும் இவர் இழந்தாரே - நேற்றுப்*
*பாடி மகிழ்ந்திட்ட ஊரைத் துறந்துமே*
*போகும் திசை யறியாரே*

*நெஞ்சில் வழிவதோ துயரம் - வழி*
*நீளும் திசையிவர் பயணம்*
*தாயின் மடியினில் ஆசையுடன் தலை*
*சாய்த்து உறங்கிய நேரம் - வந்த*
*பேய்கள் கொளுத்திய தீயில் எரிந்தவர்*
*போகும் வழியெல்லாம் ஈரம்*
*மாடுகள் கூடவா அகதி ? - தமிழ்*
*மண்ணிலே ஏனிந்தச் சகதி ?*

*பூவும் நடக்குது பிஞ்சும் நடக்குது*
*போகும் இடம் அறியாமல் - இங்கு*
*சாகும் வயதினில் வேரும் நடக்குதே*
*தங்கும் இடம் தெரியாமல்*

என்ற கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவித்துவ ஆளுமை ஈழத்து போர் இலக்கியத்தை உலகெங்கும் பறைசாற்றியுள்ளது எனலாம்.

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத் தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புக் களும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத் தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளி களின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மை யையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

முள்ளிவாய்க்கால் துயரத்தின் கதறல்கள் இன்னும் எதிரொலித்துக் கொண்டேயிருக்கின்றன. மே 18 – 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் வலிகளை வெளிப்படுத்தும் இன்னோர் ஆழமிக்க வரிகள்.

*பெரு நிலமே - துயர்*
*பேறு நிலமே.*
*எங்கள் ராசபறவைகளை*
*இங்கே தானே தந்து நடந்தோம்*
*இந்த இருள்வானின் அடியில்தானே*
*நம் இறுதி ராஜ்யமே குடங்கிக் கிடந்தது*
*ஒவ்வொரு குறுணிக் கற்களாக*
*செதுக்கிக் கட்டப்பட்ட*
*சுதந்திர தேவியாள் சிலை இந்த*
*கொதிமணலில்தானே சிதைத்து வீசப்பட்டது*
*இந்தப் பசிவெளியில்தானே*
*எங்கள் சூரியன்கள் ஒளியிழந்தன.*
*பட்ட நிலமே*
*பாழ் நிலமே*
*சாட்சியாய் கிட!*

இத்தகைய கனதியான படைப்புகள் சர்வதேச வெளியில் ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்க-ியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்க-ளில் முதன்மை பெறுகிறது. இவையே வரலாற்றில் நின்று நிலைத்திருக்கப்போகும் வலிமைபெற்ற

தொடர்ச்சி ▼

## ஈழப் போர் இலக்கியம்:

# தமிழரின் நீண்டகால துயரமும் முள்ளிவாய்க்கால் அவலமும்!

தொடர்ச்சி ▲

போரியல் இலக்கியத்தின் நீட்சியாக இன்னமும் தொடர்கிறது.

### 1956 சிங்களம் அரசு மொழி

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு பிறகு இலங்கை சுதந்திரத்தின் பின்னர், சின்னஞ்சிறு மாங்காய்த் தீவில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்த கால கட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் தெறித்து வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத்தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியும் இருந்தன. இந்த கால கட்டத்தில் வந்த இலக்கியப் படைப்புகள் இலங்கை தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை மக்களுக்கு ஏற்படுத்தின என்றும் கூறலாம்.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் இலக்கிய போக்குகளில் பல மாற்றம் அடைந்திருக்கின்றன. தமிழரின் பிரதிநிதிகளாகப் நாடாளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்விகப் போராட்டங்களின் வழியாக அடக்குமுறைகளுக்குத் தீர்வுகாண முயன்று தோல்வி கண்டமை வரலாறாகி விட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் சாத்வீகப் போராட்ட நிலையில் இருந்து ஆயுதப் போராட்ட முறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப் பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.

1956 இல் சிங்களம் மட்டுமே அரசு மொழி என்ற சட்டத்தை அரசு கொண்டுவந்தபோது அரசியல், மொழி சார்ந்து தமிழர்கள் தமிழ் மொழியை பாதுக்காக்க எதிர்வினையாற்றும் நிலையும் ஏற்பட்டது. அதனாலேயே போர்க்கால இலக்கியத்தில் அரசியல் மிக முக்கியமான விடயமாக எழுந்தது. இவ் அரசியலை அடியொற்றித்தான் ஈழத்து தமிழ் இலக்கியங்கள் பல்வேறு தளங்களில் நிகழ்ந்திருக்கிறது.

### யாழ். தமிழாராய்ச்சி மாநாடு 1974


1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு இறுதி நாளில் பதினொரு அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்ப்பலியுடன் இலங்கை அரசு தமிழ் மக்களுக்கெதிராக விடுத்த வெளிப்படையான அச்சுறுத்தலானது, கல்வித்துறையின் திட்டமிட்ட தரப்படுத்தல்களால் எதிர்காலத்தையே இழந்துநின்ற தமிழ் இளைஞர்களை ஆயுதப் போராட்டத்தின்பால் தள்ளியது.

இலங்கை அரசுகள் கொண்டு வரும் கொடூர சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும்போது இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. 1980 ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டு காலமாகத் தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகி போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர். போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம் பெயர் இலக்கியங்கள் உருவாகின.

### திட்டமிட்ட இனப் படுகொலைகள்

தொடர்ந்து சிங்கள அரசியல்வாதிகளால் 1977, 1983 ஆண்டுகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவர வன்முறைகளும் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைக்கான அவசியத்தையும் தனி நாடு ஒன்றுக்கான தேவையையும் வலியுறுத்தின. இந்தக் காலகட்ட போராட்ட வாழ்வே ஈழ இலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்றும் கருத இடமுண்டு.

1981 இல் யாழ்ப்பாண மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தகசாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்களை சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக்




கொழுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப் போராட்டமுறைகளை இளைஞர்கள் மட்டுமே பங்கேற்றி வந்த சூழல் மாறி, அறிவுசார் புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

### 1981 யாழ். நூலகம் எரிப்பு

ஈழ ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்ப காலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றோரின் விடுதலை உணர்ச்சி

தொடர்ச்சி ▼

## ஈழப் போர் இலக்கியம்:

# தமிழரின் நீண்டகால துயரமும் முள்ளிவாய்க்கால் அவலமும்!


தொடர்ச்சி ▲

மிக்க படைப்புகளை சுதந்திரன், தீப்பொறி போன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன.

ஸ்ரீலங்கா அரசின் பாரிய வன்முறை கெடு பிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப் படையாக அச்சிட முடியாத நிலை அக்காலத்தில் காணப்பட்டது.

அத்துடன் ஆரம்பகால விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங் கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகள வில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.

அதேவேளை, இனவிடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்நாட் களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தை-கய இலக்கியங்களைப் படைக்கவேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டிருந்தது என்பதும் உண்மையே.




### மரணத்துள் வாழ்வோம்

1985இல் 'மரணத்துள் வாழ்வோம்' என்ற பெயரில் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால்வரும் தொகுத்து ஒரு போரியல் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார்கள். முதலில் யாழ்ப்பாணம் தமிழியல் வெளியீடாகவும், பின்னர் கோவை விடியல் பதிப்பகத்தின் வாயிலாக உப்பிலி பாளையத்தில் இருந்து 2 ஆவது பதிப்பாக டிசெம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது.

ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதை களின் தொகுப்பு இதுவாகும். சமகால ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப் புலமாகக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர் களின் பெண் நிலைப்பட்ட அனுபவங்கள் உயிர்த் துடிப்புடன் வந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.

இந்தப் போராட்ட இலக்கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், மக்கள் படும் துயரத் தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வெளிவந்தன.

பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும் என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங்கூரம் வெளியீடாக, பங்குனி 2005 இல் வெளியானது. இத்தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993 இல் வெளிவந்த "தூ ரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே" என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகை யின் மாசி 2005 இல் வெளியான "இருந்ததும் இல்லையென்றானதும்" என்ற கவிதைவரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத் தம் 155 கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன.

ஈழத்தின் போர்க்கால கவிதைத்துறை யில் நினைவு கொள்ளத்தக்க மற்றொரு கவிஞர் மறைந்த கி.பி.அரவிந்தன் ஆவார். பிரான்ஸ் தேசத்தில் புலம் பெயர்ந்து, வாழ்ந்து காலமான இவர் ஈழப் போராட்டத்தில் விடுதலைப் போராளியாக இருந்தவர்.

இவரது படைப்புக்களில் ஈழவிடுதலைப் போராட் டமும், ஈழத்தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன. மூன்று படைப் புக்களை தமிழகத்தில் இருந்து வெளியீடு செய்த வர் இவர்.

இனி ஒரு வைகறை அவர், எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

1992 இல் வெளியான முகம்கொள் கி.பி. அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு ஆகும். கனவின் மீதி இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். கி.பி.அரவிந்தனின் கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை மட்டுமல்ல, அவ்வனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத் தப்பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப்பட்டுள்ளன எனக்கூறலாம்.

### புதுவை இரத்தினதுரை கவியுகம்

கவிஞர் புதுவை இரத்தினதுரை 'வியாசன்' என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" எனும் நூலாகும். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதை அக்கு வேறு ஆணி வேறாகத் தனது பேனாமுனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

தொடர்ச்சி ▼

## ஈழப் போர் இலக்கியம்:

# தமிழரின் நீண்டகால துயரமும் முள்ளிவாய்க்கால் அவலமும்!

**தொடர்ச்சி ▲**

'செம்மணி'என்ற தலைப்பில் வெளியான நூலில் 24 கவிஞர்களின் கவிதைகள் வெளிச்சம் வெளியீடாக 1998 இல் யாழ்ப்பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனோராக்கப்பட்டு வதையின் பின் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவையாகும்.

சிங்கள இராணுவம் அப்பாவி மக்களை யாரும் காணாமல் பிடித்துச் சென்று படுகொலை செய்து செம்மணியில் புதைத்த வஞ்சகச்செயலை அம்பலப்படுத்தும் பதிவுகளாக இவை அமைகின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமாகவே இக்கவிதைகள் அமைகின்றன.

### தீபச்செல்வன்
### போர் எதிர்ப்பு இலக்கியம்

முள்ளி வாய்க்கால் துயரத்தின் பின், ஈழத்துக் கவிஞரும், எழுத்தாளரும், சுயாதீன ஊடகவியலாளருமான தீபச்செல்வன் போர் முடிவின் பின்னரான முக்கியமான கவிதைகளை தொடர்ந்தும் எழுதிவருகிறார். ஈழநிலத்தின் வாழ்வை தன் கவிதைகளில் பதிவுசெய்யும் தீபச்செல்வன்மிக இளம் வயதிலேயே பரவலாக அறியப்பட்ட இவர் சம காலத்தின் மிக வலிமையுடைய குரலாக கருதப்படுகிறார்.

2011 இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் நெருக்கடிச் சூழலில் செய்தித் தேடலுக்கான சிறந்த ஊடகவிலாயளருக்கான பேராசிரியர் கைலாசபதி விருதையும், 2014 - இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் மற்றும் இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் இணைந்து வழங்கும் நெருக்கடிச் சூழலில் இயங்கியமைக்கான 2014 ஆம் ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர் விருதையும் பெற்ற தீபச்செல்வன் சாட்சிகளற்ற போரின் மனசாட்சிகளாக தீபச் செல்வனின் கவிதைகள் பரணமிக்கின்றன.






# சர்வதேச டிஜிட்டல் ஓவியம்; மூதூர் மாணவன் சாதனை!

**(ஹெச் எம் ஹலால்தீன்)**

உலக சுகாதார தினத்தை முன்னிட்டு தெற்காசிய நாடுகளுக்கு இடையில் நடைபெற்ற 12 வயதுக்கு உட்பட்ட பிரிவில் மூதூரைச் சேர்ந்த நபீஸ் முகம்மட் ஸமீல் டிஜிட்டல் ஓவியப் போட்டியில் தென்னாசிய நாடுகளில் மூன்றாம் இடத்தைப் பெற்று வெற்றிச் சாதனையை நிலை நாட்டியுள்ளார்.

மூதூர் அல் - ஹிலால் மத்திய கல்லூரியில் தரம் 7 இல் கல்வி கற்கும் மாணவர்.

இந்தப் போட்டியில் முதலிடம் - பங்களாதேஸ், இரண்டாம் இடம் -இந்தியா மூன்றாம் இடம் - இலங்கை என்பதும் குறிப்பிடத்தக்கது.





# கோட்லோஜ் தோட்டத்தில் உள்ள கருப்பு சுவாமி ஆலயத்தில் வேள்வி





(ஆ.ரமேஸ்)

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட கோட்லோஜ் தோட்டத்தின் இலக்கம் 04 தேயிலை மலை உச்சத்தில் அமைந்துள்ள கருப்பு சுவாமி ஆலயத்தின் வருடாந்த வேள்வி பூசை அந்தத் தோட்ட பொது மக்களின் பங்களிப்புடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை (12) இடம்பெற்றது.

இந்தப் பூசை வழிப்பாட்டில் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமானின் வழிகாட்டலின் பேரில் நுவரெலியா பிரதேச சபை முன்னால் தலைவர் வேலு யோகராஜ் மற்றும் சபையின் முன்னால் உறுப்பினர் ஜே.ராமஜெயம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கோட்லோஜ் தோட்ட மலை உச்சியில் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பணிப்புக்கு அமைய ஜீவன் தொண்டமானால் பிரதிர்ஷ்டை செய்து வைக்கப்பட்ட கருப்பு சுவாமிக்கு தோட்ட மக்கள் பால்குடம் எடுத்து விசேட பூசை வழிப்பாடுகளில் ஈடுப்பட்டனர்.

இதைத் தொடர்ந்து தோட்ட மக்களுக்குப் பகல் அன்னதானம் வழங்கப்பட்டது.

## கிழக்கு மாகாண சமூகசேவைகள் அமைச்சால்

# மட்டு. முதியோர் இல்லங்களுக்கு சக்கர நாற்காலிகள் கையளிப்பு!



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள முதியோர் இல்லங்களுக்குக் கிழக்கு மாகாண சமூக சேவை அமைச்சால் சக்கர நாற்காலி மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிகழ்வு நேற்று ஞாயிற்றுக் கிழமை (12) மட்டக்களப்பு திறனியம் திறந்த பாடசாலை கற்றல் நிலையத்தில் உளநல வைத்தியர் யூ.டி. ரமேஷ் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே. முரளிதரன் கலந்து கொண்டு தெரிவு செய்யப்பட்ட இல்லங்களுக்கு சுமார் 30 லட்சம் ரூபா பெறுமதியான சக்கர நாற்காலி மற்றும் மருத்துவ உபகரணத் தொகுதிகளை வழங்கிவைத்தார்.

இன்றைய இந்த நிகழ்வுக்கு அரச உயர் அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், வயோதிபர் இல்லங்களுக்கான பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



# கல்லடி விபுலானந்த வித்தியாலயத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலயத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பழைய மாணவர்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்று போட்டியின் இறுதி நாள் நிகழ்வும்,வெற்றியீட்டிய அணிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் நேற்று ஞாயிற்றுக்கிழமை (12) கல்லடி முகத்துவாரம் விபுலானந்த வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் கே.தவேந்திர குமார் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில்,மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீஇராமகிருஸ்ணமிஷன் மேலாளர் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் மற்றும் கல்லடி புதுமுகத்துவாரம் புனித இஞ்ஞாசியார் ஆலய பங்குத் தந்தை அருட் தந்தை லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் ஆகியோர் ஆன்மீக அதிதிகளாகவும்,ரணில் 24 செயலணி தலைவர் கணபதிப்பிள்ளை மோகன் பிரதம அதிதியாகவும்,முன்னாள் பாடசாலை அதிபர் வ.சொக்கலிங்கம் மற்றும் முன்னாள் பாடசாலை ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில்பாடசாலையின் பிரதி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

15 பழைய மாணவர் அணிகள் பங்கு கொண்ட 5 ஓவர்களை உள்ளடக்கிய தான சுற்றுப் போட்டியின் இறுதி போட்டிநிகழ்வுகள் இடம்பெற்று, சாதனை மாணவர்கள் பாராட்டும், மாணவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் கௌரவமும் இடம் பெற்றது.

இந்தச் சுற்றுத் தொடரில் முதலாம் இடத்தை 2013 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களின் ஈஸ்டன் பிஸ்ஸர் அணியும், இரண்டாம் இடத்தை 2019 ஆம் ஆண்டு பிரிவு மாணவர்களின் பைற்றிங் பல்கன்ஸ் அணியும் பெற்றுக் கொண்டன.

அத்தோடு பழைய மாணவர்கள் பங்கு கொண்ட கயிறு இழுத்தல் போட்டி அனைவரதும் கவனத்தையும் ஈர்த்தன.











# சம்மாந்துறையில் திருடப்பட்ட மோ. சைக்கிள் மீட்பு!

## சந்தேகத்தில் இருவர் கைது!!

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசத்தில் சில தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது என்று சைக்கிள் உரிமையாளர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யதாக சம்மாந்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது நேற்று முன்தினம் (11) ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொண்ட மேலதிக விசாரணையில் மோட்டார் சைக்கிள் பொத்துவில் பிரதேசத்தில் இருப்பதாக சந்தேக நபர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பொத்துவில் பொலிஸாருக்கும் தகவல் வழங்கியதில் நேற்றுத் (12) திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை மீட்டதுடன் திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய மற்றும் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.






# குருத்வாராவில் வழிபாடு நடத்திய பிரதமர் மோடி உணவு சமைத்து சீக்கியர்களுக்குப் பரிமாறினார்

பாட்னா,மே13

குருத்வாராவில் வழிபாடு நடத்திய பிரதமர் மோடி அங்குள்ள உணவுக் கூடத்தில் சமைத்து சீக்கியர்களுக்கு பரிமாறினார்.

நாடாளுமன்றத்துக்கு 7 கட்டங்களாக நடைபெறும் தேர்தலில் 4 ஆவது கட்டமாக, 96 நாடாளுமன்ற தொகுதிகளுக்கு இன்று வாக்குப்பதிவு நடைபெற்று வருகிறது.இதைத் தொடர்ந்து 5 ஆவது கட்டமாக 49 தொகுதிகளில் வருகிற 20 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இந்த நிலையில் நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்துக்காக பிரதமர் நரேந்திர மோடி பீகார் சென்றுள்ளார். இன்று காலை பாட்னாவில் உள்ள சீக்கியர்களின் புனித தலமான குருத் வாராவுக்கு பிரதமர் மோடி சென்றார். அங்கு வழிபாடு நடத்திய பிரதமர் மோடி, பின்னர் அங்குள்ள உணவுக் கூடத்தில் சில உணவுகளைச் சமைத்தார். அதன்பின் அங்கிருந்த சீக்கியர்களுக்கு உணவு பரிமாறினார்.

அப்போது பிரதமர் மோடி ஒரேஞ்ச் நிற தலைப்பாகை அணிந்திருந்தார். இந்த நிலையில் இது தொடர்பான வீடியோ காட்சிகள் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகின் றன.

# ராகுலுடன் நேரடி விவாதத்துக்கு பிரதமர் மோடி தயங்குவது ஏன்?

## தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை கேள்வி

சென்னை,மே13

ராகுலுடன் நேரடி விவாதத்துக்கு பிரதமர் மோடி தயங்குவது ஏன் என தமிழகக் காங்கிரஸ் தலைவர் செல்வபெருந்தகை கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

ஓய்வு பெற்ற நீதிபதிகள் மதன் பி. லோகூர், அஜித் பி.ஷா மற்றும் மூத்த பத்திரிகையாளர் என். ராம் ஆகியோர் நாடாளுமன்றத் தேர்தலின் முக்கிய பிரச்சுனைகள் குறித்து பொது தளத்தில் விவாதம் நடத்த பிரதமர் மோடிக்கும், ராகுல் காந்திக்கும் அழைப்பு விடுத்து கடிதம் எழுதினர்.

இந்த கடிதம் கிடைத்தவுடனே அழைப்பை ஏற்றுக் கொண்ட ராகுல்காந்தி, பிரதமர் மோடியுடன் நேருக்கு நேர் விவாதம் நடத்தத் தயார் என நேற்று முன்தினம் தனது சமூக வலைத்தளத்தில் தெரிவித்தார். இந்நிலையில் இதுவரை பிரதமர் நரேந்திர மோடியிடமிருந்து எந்தப் பதிலும் வரவில்லை.

அத்தகைய விவாதத்தை நடத்துவதற்கு நரேந்திர மோடிக்கு துணிவில்லை என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது. மடியில் கனம் இருப்பதால் ராகுல்காந்தியுடன் விவாதிக்க நரேந்திர மோடி தயாராக இல்லை.

விலைவாசி உயர்வு, வரலாறு காணாத வேலையில்லா திண்டாட்டம், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை மறுப்பு, பணமதிப்பு நீக்கத்தினால் ஏற்பட்ட பாதிப்பு, கொரோனா தொற்றினால் 5 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழப்பு, பொருளாதார பாதிப்பு, மோடியின் சலுகையினால் அதானி, அம்பானி சொத்து குவிப்பு, ஏழை, எளியவர்களின் வாழ்வாதாரம் இழப்பு, மாநில உரிமைகள் பறிப்பு போன்ற



நடவடிக்கைகள் காரணமாக நரேந்திர மோடி திரும்ப ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்பு கடுகளவு கூட இல்லை என்று அறிவார்ந்த அரசியல் வல்லுநர்களும், பாரபட்சமற்ற தேர்தல் கணிப்பாளர்களும் நாள்தோறும் கருத்துகளை கூறி வருகிறார்கள்.

இதனால் பதற்றமும், அச்சமும் அடைந்த பிரதமர் மோடியும், பா.ஜ.க.வினரும் மத ரீதியாக மக்களை பிளவு படுத்தி, அச்சுறுத்தி வெற்றி பெற்று விடலாம் என்கிற கனவை நாளுக்கு நாள் ராகுல்காந்தி தகர்த்து வருகிறார்.

இதன்மூலம் தேர்தலுக்கு பிறகு இந்தியா கூட்டணி ஆட்சி அமைவது உறுதி என்கிற நம்பிக்கை நாளுக்கு நாள் வலிமை பெற்று வருகிறது. இந்தியாவின் எதிர்காலம் ஒளிமயமாக அமைய இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது உறுதியாகி இருக்கிறது. இந்த பின்னணியில் தான் ராகுல்காந்தியோடு நேருக்கு நேர் விவாதிக்க பிரதமர் மோடி அஞ்சி பின் வாங்குவதில் வியப்பொன்றும் இல்லை.

-இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



# உக்ரைன் நடத்திய வான் தாக்குதலில் ரஷ்யாவில் அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து 15 பேர் சாவு!

**மொஸ்கோ,மே13**

உக்ரைனின் வான் தாக்குதலில் ரஷ்யாவில் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து 15 பேர் பலியாகியுள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கை 2 ஆண்டுகளைக் கடந்து நீடிக்கிறது. ரஷ்யாவின் தாக்குதலுக்கு உக்ரைன் பதிலடி கொடுத்து வருகிறது. அவ்வகையில், நேற்று ரஷ்யாவின் பெல்கோரட் நகரில் உக்ரைன் நடத்திய வான் தாக்குதலில் 10 தளங்கள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் இடிந்து விழுந்தது. அந்தக் குடியிருப்பில் வசித்தவர்கள் பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கினர். மீட்புபணிகள் முழுவீச்சில் நடைபெறுகின்றன. இன்று காலை நிலவரப்படி 15 பேர் பலியாகினர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அருகில் உள்ள குடியிருப்பு கட்டடங்களும் இடிந்து விழும் என்ற அச்சம் ஏற்பட்டது. இதனால் அந்த குடியிருப்பில் இருந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதுபற்றி பெல்கோரட் பிராந்திய கவர்னர் வியாசெஸ்லவ் கிளாட்கோவ் கூறுகையில் “குடியிருப்புக் கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றும் முக்கிய பகுதி நிறைவடைந்துள்ள நிலையில், இதுவரை 15 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. நேற்று மாலை நடந்த தாக்குதலில் பொதுமக்கள் 3 பேர் இறந்தனர். 11 ஆம் திகதித் தாக்குதலின்போது காயமடைந்த ஒருவர் மருத்துவமனையில் இறந்துள்ளார். இதன்மூலம் உக்ரைனின் தாக்குதலில் அப்பாவி மக்கள் 19 பேரை இழந்திருக்கிறோம்” – என்றார்.

இதற்கிடையே, உக்ரைனின் வடகிழக்கு கார்கிவ் பகுதியில் உக்ரைன் படைகள் கடினமான சூழ்நிலையை எதிர்கொள்கின்றன என இராணுவத் தளபதி தெரிவித்தார். அங்கு, ரஷ்யப் படைகள் தொடர்ந்து முன்னேறி வருவதால் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதற்கிடையே ரஷ்யாவின் இடைவிடாத தாக்குதல் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறியிருப்பதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் கூறினார். கார்கிவ் பகுதியில் பல கிராமங்களை பிடித்திருப்பதாக ரஷ்ய இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஆனால், எதிர் தாக்குதல் நடத்தி வருவதாக உக்ரைன் கூறி உள்ளது.

# ‘மனிதாபிமானப் போர் நிறுத்தம்’ காசாவில் உடனடியாகத் தேவை

## ஐ.நா. பொதுச்செயலாளர் வலியுறுத்தல்

குவைத்,மே.13

காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் உடனடியாக தேவை என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தி உள்ளார்.

இஸ்ரேல் – ஹமாஸ் இடையேயான போரில் காசா தரப்பில் இதுவரை சுமார் 35 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர். எனவே போரை நிறுத்த கோரி ஐ.நா. மற்றும் உலக நாடுகள் பலவும் வலியுறுத்தி வருகின்றன. அதேபோல் வெளிநாடுகளில் உள்ள பாலஸ்தீன ஆதரவாளர்கள் இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இதற்கிடையே போரை நிறுத்துவது குறித்த பேச்சுவார்த்தையில் ஈடுபட



இஸ்ரேலுக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தனியாகு அதனை நிராகரித்தார்.

இந்நிலையில் காசாவில் மனிதாபிமான போர் நிறுத்தம் உடனடியாக தேவை என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் ஆன்டனியோ குட்டரெஸ் வலியுறுத்தி உள்ளார்.

இதுதொடர்பாக குவைத்தில் நடந்த சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டில் பேசிய அவர், “காசாவில் உடனடியாக மனிதாபிமான போர்நிறுத்தம் காலத்தின் தேவை. அனைத்து பணயக் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும். மனிதாபிமான உதவிகளில் உடனடி எழுச்சிக்கான எனது அழைப்பு மற்றும் உலகின் அழைப்பை நான் மீண்டும் வலியுறுத்துகிறேன். போர் நிறுத்தம் ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும். இந்தப் போரின் பேரழிவுகள் மற்றும் அதிர்ச்சியில் இருந்து மீள்வதற்கு நீண்ட காலங்கள் தேவைப்படும்” என்று ஆன்டனியோ குட்டரெஸ் மேலும் கூறினார்.

பக்கங்கள் 05

# கனடா முரசு

திங்கட்கிழமை 13/05/2024

## கார் - மோ. சைக்கிள் விபத்தில் 2 பேர் காயம்

ஒன்ராரியோ, மே 13

ஒட்டாவாவின் பார்ஹெவன் பகுதியில் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் மோதியதில் இரண்டு பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக் C2




# கியூபெக் பல்கலை மொன்ரியல் வளாகத்திலும் பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள் முளைத்தன!

கியூபெக், மே 13

மொன்ரியல் பல்கலைக்கழகத்தில் புதிதாக பலஸ்தீன ஆதரவு கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே, மொன்ரியலில் மெக்கில் பல்கலைக்கழகத்தில் பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய கூடாரங்களை அகற்றுவதற்கு மெக்கில் பல்கலைக்கழக நிர்வாக நீதிமன்ற உதவியை நாடியுள்ள நிலையிலேயே கியூபெக் பல்கலைக்கழகத்தின் மொன்ரியல் வளாகத்தில் நேற்று மே 12ஆம் திகதி பலஸ்தீன ஆதரவுக் கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. C2

# கியூபெக் வரலாற்று அருங்காட்சியகத்தின் கருத்தியல் பற்றி பூர்வீகக் குடிகள் குழப்பம்

கியூபெக், மே 13

கியூபெக் அரசாங்கத்தின் வரலாற்று அருங்காட்சியகம் குறித்து வரலாற்று ஆய்வாளர்களும், பூர்வீகக் குடியினரும் கேள்வியெழுப்பினர்.

கியூபெக்கின் வரலாற்றை வெளிப்படுத்தும் வகையில் கியூபெக்கில் அருங்காட்சியகம் ஒன்று அமைக்கப்படும் என கியூபெக் அரசாங்கம் அண்மையில் அறிவித்திருந்தது.

கியூபெக்கிற்கு 16ஆம் மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் ஜெக்கியுஸ் கார்டியர் மற்றும் சாமுவெல் தகெம்ளய்ன் ஆகிய இரண்டு பிரெஞ்சுக்காரர்களின் வருகையுடன் அதன் வரலாறு ஆரம்பிப்பதாக C2



# அரசியல்வாதிகள் மீதான அச்சுறுத்தல்: கையாள்வதற்குப் புதிய சட்டம் தேவை!

## தேசிய பொலிஸ் சேவையின் பிரதானி தெரிவிப்பு

ஒன்ராரியோ, மே 13

அரசியல்வாதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்களை கையாள்வதற்கு புதிய சட்டம் உருவாக்கப்பட வேண்டும் எனக் கனடாவின் தேசிய பொலிஸ் சேவையின் பிரதானி தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு இலகுவாக புதிய சட்டம் ஒன்றை உருவாக்குவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும் என தேசிய பொலிஸ் சேவையின் ஆணையாளர் மைக் டுஹெம் தெரிவித்துள்ளார்.

அரசியல்வாதிகளுக்கு எதிராக அச்சுறுத்தல் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு தற்போதுள்ள குற்றவியல் சட்டத்தில் போதிய ஏற்பாடுகள் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



# கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராடிய தலைவர் இன்று நீதிமன்றில்

ஒன்ராரியோ, மே 13

ஒட்டாவாவில் 2022ஆம் ஆண்டில் கொவிட் கட்டுப்பாடுகளுக்கு எதிராக போராட்டம் நடத்திய 'ப்ரீடொம் கொன்வொய்' தலைவர் இன்று நீதிமன்றில் முன்னிலையாகவுள்ளார்.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் டவுன்டவுனில் ஏறக்குறைய ஒரு மாத காலம் தடைப்பட்ட போராட்டத்தில் தனது பங்கிற்காக, ரெட் டீர் மீது மிரட்டல், பொலிஸாரைத் தடுத்தல், நீதிமன்ற உத்தரவை மீறுதல் மற்றும் பிற குற்றங்கள் சுமத்தப்பட்டுள்ளன.

போராட்டத்துடன் சம்பந்தப்பட்டமைக்காக ரெட் டீர் கைது செய்யப்பட்டு ஐந்து மாதங்கள் சிறையில் இருந்தார்.



இன்று நடைபெறவுள்ள இந்த நீதிமன்ற விசாரணைக்கு, போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்த மக்களும் நீதிமன்றத்திற்கு வெளியே கூடுவார்கள் என எதிர்பார்கப்படுகின்றது.




## கார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளனர்.

பிரின்ஸ் ஒவ் வேல்ஸ் மற்றும் ரிடோ டிரைவ்களில் இந்த விபத்து நடந்ததாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்தனர்.

20 வயதான மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

காரை ஓட்டிச் சென்ற 50 வயது மதிக்கத்தக்க பெண் சிறு காயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## கியூபெக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஸ்ரேல் – ஹமாஸ் போரின் மத்தியில் பலஸ்தீன மக்களிற்கு ஆதரவளிக்கும் வகையில் மாகாணத்தின் ஏனைய பல்கலைக்கழகங்களுடன் ஒருமைப்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கியூபெக் பல்கலைக்கழக மாணவர்களும் இணைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் கல்வி நிறுவனங்களுடனான தொடர்பைத் துண்டிக்குமாறும், இஸ்ரேலுடனான ஏனைய தொடர்புகளை வெளிப்படுத்துமாறும் கோரியே இந்த கூடாரங்களில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கியூபெக் வரலாற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியூபெக் அரசாங்கம் கருத்து தெரிவித்து வெளியிட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து கியூபெக்கில் பூர்வீகக் குடியினரின் வரலாற்றை அழிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக பூர்வீகக் குடியினர் சபை குற்றம் சுமத்தியிருந்தது.

இதனால், வரலாறு எவ்வாறு சொல்லப்படப் போகின்றது என்பது தொடர்பில் கேள்விகள் இருப்பதாக பூர்வீகக் குடிகளைச் சேர்ந்த இரண்டு வரலாற்று ஆய்வாளர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இவ்வாறான அருங்காட்சியகம் அமைக்கும் முயற்சிகள், அரசியல் நோக்கத்துடனானது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.




# வின்னிபெக் பல்கலை நகர வளாகத்திலும் பத்துக்கும் அதிக போராட்டக் கூடாரங்கள்

மனிடோபா, மே 13

பலஸ்தீன ஆதரவு போராட்டக் காரர்கள் வின்னிபெக் பல்கலைக் கழகத்தின் நகர வளாகத்தில் போராட்ட கூடாரங்களை அமைத்துள்ளனர்.

பல்கலைக்கழக வளாகத்தில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்படுகின்றது.

வின்னிபெக் பல்கலைக்கழகம் தனது இணையதளத்தில் வெளியிட் டுள்ள அறிக்கையில், பல்கலைக் கழகத்தின் பாதுகாப்புக் குழு நிலை மையைக் கண்காணித்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

வசந்த கால வகுப்புகள் மற்றும் பிற வளாக நடவடிக்கைகள் திட்டமிட்டபடி தொடர்கின்றன எனவும் பல்கலைக்கழக நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கனடாவிலும், உலகெங்கிலும் பல் கலைக்கழக மாணவர்கள் முன்னெ டுக்கும் கூடார போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக வின்னிபெக் பல்கலைக்கழக மாண வர்கள் தெரிவித்துள்ளனர்.




# 5 மில்லியன் டொலர் பெறுமதியான கைக்கடிகாரங்கள் தேடுதலில் மீட்பு

ஒன்ராரியோ, மே 13

டொரன்டோவில் இடம்பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது 5 மில்லியன் டொலர்கள் பெறுமதியான கைக்கடிகாரங்களை டொரன்டோ பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் இரு சந்தேகநபர் களுக்கு எதிராக குற்றங்கள் சுமத்தப் பட்டுள்ளந என டொரன்டோ பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் ஸ்பெடினா அவனியு பகுதி யில் முகமூடி அணிந்த இருவரால் கள வாடப்பட்ட கைக்கடிகாரங்கள் இவை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# நிஜ்ஜர் கொலை வழக்கில் இப்போது முதன்மைக் குற்றவாளியே கைதாம்!

சீக்கிய தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலை வழக்கில் சமீபத்தில் கைதான நான்காவது நபர், முதன்மை குற்ற வாளிகளில் ஒருவர் என விசாரணையில் அம்பலமாகியுள்ளதாம்.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் உள்ள சீக்கிய ஆலயத்தின் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜர் கொலை வழக்கில் இதுவரை நால்வர் கைதாகியுள்ளனர். நால்வரும் இந்தியர்கள் என்ற நிலையில், சமீபத் தில் கைதான நான்காவது நபரே கொலைகாரர்களில் ஒருவர் என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ஆனால் இந்த நால்வருக்கும் இந் திய அரசாங்கத்துடன் தொடர்புள்ளதா என்பது குறித்து தீவிர விசாரணை முன்னெடுக்கப்படும் என்றே நம்பப் படுகிறது. ஏற்கனவே, நிஜ்ஜர் கொலை யில் இந்திய அரசாங்கத்திற்கு தொடர் பிருப்பதாக கனேடிய நாடாளுமன்றத்தில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றஞ் சாட்டியிருந்தார்.

இந்த வழக்கில் ஒன்ராறியோவின்



பிராம்டன் பகுதியில் குடியிருந்து வந்த 22 வயதான அமந்தீப் சிங் மீது முதல் நிலை கொலை வழக்கு பதியப்பட் டுள்ளது. இந்த நபர் கடந்த நவம்பர் மாதத்தில் இருந்தே வேறு வழக்கில் சிக்கி, விசாரணக் கைதியாக சிறையில் உள்ளார்.

2023 ஜூன் மாதம் 18 ஆம் திகதி ஹர்தீப் சிங் நிஜ்ஜரை கொலை செய்த இரு துப்பாக்கிதாரிகளில் அமந்தீப் சிங் என்பவரும் ஒருவர் என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

கனேடிய குடிமகனான நிஜ்ஜர், இந்தியாவில் காலிஸ்தான் இயக்கத்தின் முதன்மையான தலைவர்களில் ஒருவர்.

இந்தியாவின் பஞ்சாப் மாகாணத்தை இரண்டாக பிரிக்கக் கோரும் காலிஸ் தான் ஆதரவாளர்களை இந்தியாவின் ஆளும் நரேந்திர மோடி அரசு தீவிர வாதிகள் என்றே அடையாளப்படுத்தி வருகிறது.

தற்போது நிஜ்ஜர் கொலை வழக்கில் நால்வர் கைதாகியுள்ளனர். இந்த நால்வரும் இந்தியர்கள் என்பதுடன், தற்காலிக விசாவில் இவர்கள் நால்வரும் கனடா வந்துள்ளனர். அத்துடன் மிக மோசமான குற்றச்செயல்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த நவம்பர் 3ம் திகதி கைதான அமந்தீப் சிங் மீது விதிகளை மீறி ஆயுதம் வைத்திருத்தல், போதை மருந்து, போக்குவரத்து விதிகளை மீறுதல் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதியப்பட்டு, விசாரணைக் கைதியாக அவர் இருந்தார்.

கைது நடவடிக்கையின் போது அவரி டம் இருந்து துப்பாக்கிகள் சில கைப்பற் றப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கனடாவில் அதிகரித்துள்ள வீட்டு வாடகைக் கட்டணம்

கனடாவில் வீட்டு வாடகைத் தொகை யில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக கனடா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

2023ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது கடந்த ஏப்ரல் மாதம் வாடகைத் தொகையானது 9.3 வீதமாக அதிகரித்துள்ளமை ஆய்வுகளின் மூலம் தெரியவந்துள்ளது.

கனடாவில் ஒரு படுக்கை அறையைக் கொண்ட வீடு ஒன்றின் சராசரி வாடகை 1,915 டொலர்களாகப் பதிவாகியுள்ள தோடு, இது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 11.6 வீதமாக அதிகரித் துள்ளது.

இரண்டு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு ஒன்றின் சராசரி வாடகைத் தொகை 2,295 டொலர்களாக பதிவாகி யுள்ள நிலையில், இந்த தொகையானது கடந்த 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது 11 வீதமாக அதிகரித்துள்ளமை குறிப் பிடத்தக்கது.






# ரொறன்ரோவில் தம்பதியினர் மீது இளைஞர் கும்பல் கத்திக் குத்து!

ரொறன்ரோவில் இளைஞர் குழுவொன்று தம்பதியினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞர்கள் மேற்கொண்ட கத்திக் குத்துத் தாக்குதலில் நபர் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

றோயல் யோர்க் வீதியில் வைத்து இந்த தம்பதியினருடன் வாக்கு வாதத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் பின்னர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கத்திக் குத்துத் தாக்குதலில் படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவருக்கு உயிராபத்து கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நீதிபதிகளின் பற்றாக்குறை காரணமாக சந்தேகநபர் விசாரணையின்றி விடுவிப்பு

கனடாவில் நீதிபதிகளுக்கு நிலவி வரும் பற்றாக்குறை காரணமாக ஒரு சந்தேக நபர் மீதான குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

ரொறன்ரோவில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பெண் ஒருவரை பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் துன்புறுத்தினார் என எம்ரோன் கொன்ஸ்டானின் என்ற நபருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இந்த நபருக்கு எதிரான வழக்கு விசாரணை நடைபெற சில வாரங்களுக்கு முன்னதாக குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

கெதரீன் ரிஹிநிலாண்டர் என்பவருக்கு எதிராக பாலியல் ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தாக்குதல்களை மேற்கொண்டார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.




குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிரான வழக்கு விசாரணைகள் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டிய உரிமை மீறப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதன் அடிப்படையில் கொன்ஸ்டானின் விடுவிக்கப்பட்டுள்ளார். கடந்த 2019 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 3 ஆம் திகதி கொன்ஸ்டானின் கைது செய்யப்பட்டிருந்தார்.

வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள நீதிபதிகள் இல்லாத காரணத்தினால் இந்த குற்றச்சாட்டுக்கள் வாபஸ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.